# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு

கார்த்திகை - மார்கழி 2017 | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 48





## ஐரோப்பாவின் அடுத்த தலைவர் இவரே!

### பிரான்ஸ் நாட்டை செம்மையாக வழிநடாத்தினால்....

என மகுடமிட்டு ரைம்ஸ் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. மக்ரோன் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்று ஆறுமாதங்கள் கடந்துவிட்டன..

இம்மனுவல் மக்ரோனின் செல்வாக்கும் ஆரம்பத்தை விட தொடர்ந்தும் குறைந்தே வருகின்றது. மக்ரோனின் ஆட்சியை எதிர்த்து மக்கள் நான்கு முறை வீதிகளில் போராட்டங்களில் இறங்கிவிட்டனர். மக்ரோன் முன்வைத்துள்ள அனைத்து திட்டங்களும் சமூகப் பாதுகாப்பற்றவை

என்பது எதிர்ப்பாளர்களின் கூற்றாகவுள்ளது. மக்களின், எதிர்ப்பாளர்களின் குரலையும் செவிமடுக்குமாறு பாராளுமன்றத்தில் France Insoumise கட்சி உறுப்பினரான Bastien Lachaud தெரிவித்துள்ளார். மேலும் பாராளுமன்றத்தில் அதிபரின் கட்சியான La République en marche ! உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருப்பதனால் இலகுவாக சட்டமூலங்களைப் பிறப்பித்துவருகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவையெல்லாம் தேவையில்லாத குற்றச்சாட்டுகள். பிரான்ஸ் மக்களின் பழக்கப்பட்டுப்போன பழமையான அரசியலில் நான் மாற்றங்கள் செய்து வருகிறேன், புதிய பிரான்சை பொருளாதார சமூக ரீதி யாக அனைத்து துறையிலும் முன்மாதிரியான ஐரோப்பாவின் முதன்மையான குரலாக சர்வதேச அளவில் முக்கியமான முடிவு-களை முன்னின்று எடுக்கக்கூடிய நாடாக மாற்றுவதற்கு நான் தொடர்ந்து பாடுபட்டு வருகிறேன் என்கிறார் அதிபர் மக்ரோன்.

கடந்த ஆறுமாத கால ஆட்சியில் பத்துக்கும் அதிகமான உலகத்தலைவர்களைச் சந்தித்துள்ளார். அத்தோடு மட்டுமல்லாது அனைத்து தரப்பு உலகத்தலைவர்களிடமும் 'Good man" அந்தஸ்தைப் பெற்று வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பூமி வெப்பமடைதல் தொடர்பாக பாரிஸ் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமெரிக்க அதிபர் ஏற்க மறுத்த போதிலும் மீண்டும் அவருடன் நட்புப் பாராட்டி அவரின் முடிவை மீள்பரிசீலனை செய்யவைத்தார். பூமி வெப்பமடைதல் தொடர்பான முடிவுகளை எடுக்கக்கூடிய அடுத்த மாநாட்டுக்காக இன்று போரால் தரைமட்டமாகிக் கிடக்கும் சிரியா உட்பட 100 நாட்டுத் தலைவர்கள் மக்ரோனின் அழைப்பை ஏற்றுள்ளனர். ஐரோப்பாவை மாற்றியமைக்க மக்ரோன் முழுமுனைப்பில் இயங்கி வருகின்றார்.

ஐரோப்பாவின் தலைமையாக சர்வதேச முன்னிலையில் முக்கிய குரலாக பிரா ன்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோன் திகழவேண்டுமாயின் இம்மனுவல் மக்ரோன் முதலில் தனது நாட்டை சரியான பாதையில் வழி நடத்த வேண்டும், தவறும் பட்சத்தில் சர்வதேசப்பரப்பில் ஐரோப்பிய நாடுகளின் முன் மக்ரோன் தனது குரலை இழக்கவேண்டி நேரிடும் என ரைம்ஸ் இதழ் மேலும் கோடிட்டுள்ளது.


நிலா
www.nilafrance.com

தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com



# காவியமான காதல் கடிதங்கள்..!

"நீயின்றி நான் என் பலமனைத்தையும் இழந்துவிட்டேன்.
பார்க்கும் இடமெங்கும் நீ மட்டுமே தெரிகின்றாய்.
நீயில்லாமல் என்னால் வாழமுடியாது..."

இது அல்பேர்ட் காம்யூ தனது காதலி மரியாவிற்கு எழுதிய காதல் வரிகள்.

அந்தப் பிரிவை அடுத்து நான்கு வருடங்களின் பின்னர், மீண்டும் மரியா பாரிஸிற்கு வந்தார். பிரிந்த காதல் மீண்டும் இணைந்தது. அவர்கள் நாள் தோறும் கடிதங்களைப் பரிமாறிக்கொண்டனர். இருவரும் தம் வேலை நிமித்தம் பிரிந்திருந்தாலும் அவர்களது மிக நெருக்கமான காதலை கடிதங்களில் வெளிப்படுத்தினர். 1957இல் மரியா ஆர்ஜன்ரீனாவில் இருந்தபோதே அல்பேர்ட் நோபல் பரிசு பெற்ற செய்தி அறிவிக்கப்பட்டது. அல்பேர்ட் உடனடியாகத் தந்தி மூலம் அறியப்படுத்தினார். "இனியும் நீ அருகில் இல்லாத நேரத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என காம்யூ மரியாவிற்கு உருக்கமாக எழுதினார்.

1959 டிசம்பர் 30 ல் அவர் அந்தக் கடைசிக்கடிதத்தை எழுதினார். "மரியா, நான் லூர்மரினிலிருந்து பாரிஸிற்கு காரில் வருகிறேன். உன்னிடம் வருவதற்கான பயணச் சீட்டையும் வாங்கிவிட்டேன். மீண்டும் நாங்கள் சந்திக்கப் போகும் நாளை எண்ணி மகிழ்ச்சியில் திளைத்தபடி இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். மரியா, நான் மிகவும் சந்தோசமாயுள்ளேன். மீண்டும் விரைவில் நேரில் சந்திப்போம்" என அந்தக் காதல் கடிதம் நிறைவு பெறுகிறது.

கடிதம் அனுப்பி ஐந்தாம் நாள் பாரிசிற்குச் செல்லும் வழியில் கோரமான கார் விபத்தில் அல்பேர்ட் காம்யூ அந்த இடத்திலேயே மரணமானார்.

❍

யூன் 6, 1944 பிரான்ஸை விடுவிப்பதற்காக நோமன்டி கடற்கரைகளில் அணிசேர் நாடுகள் தரையிறங்கின. அன்றைய தினம் பாரிசில் நாடகத்திற்கான ஒத்திகையின் போது காம்யூவும் மரியாவும் சந்தித்தனர். அப்போது மரியாவிற்கு வயது 21 காம்யூவிற்கு வயது 30. அவர்களுள் நெருக்கமான காதல் வளர்ந்துவரும் காலத்தில் பாரிஸ் விடுவிக்கப்பட்டு அல்பேட் காம்யூவின் மனைவி பாரிசில் அவரோடு வாழ்வதற்காக வந்துவிட்டார். பிரிந்து வாழ முடியாத மரியா தன்னை திருமணம் செய்யுமாறு அல்பேர்ட்டை வேண்டிக்கொண்டபோதும் அவர் மறுத்துவிட்டார். தாழாத துயரத்தில் அன்றே பாரிசிலிருந்து சென்றுவிட்டார் மரியா. அதன் பின்னான காலத்தில் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றிருந்தாலும் தன் காதலை இழந்த அல்பேர்ட் மிகவும் மனம் உடைந்து தீராத மன உளைச்சலுக்கு உள்ளானார்.

❍

மரியா, மிக அழகிய, தனக்கேயான இடத்தைப் பிடித்துக்கொண்ட சுதந்திரமான சிந்தனையுடைய நடிகை. அல்பேட் காம்யூ, அவர் வாழ்ந்த காலப்பகுதியின் மிகச் சிறந்த எழுத்தாளர். அவரால் எழுதப்பட்ட "L'etranger" என்ற நாவல் நோபல் பரிசு பெற்றது. இந்நாவல் "அந்நியன்" என்ற பெயரில் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பிறிதொரு காதல் காவியமென சுட்டும் கடிதக்கட்டுக்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. பிரான்சின் நோபல் பரிசுபெற்ற எழுத்தாளர் அல்பேர்ட் காம்யூ அவர்களுக்கும் ஸ்பெயின் நாட்டின் நடிகை மரியா அவர்களுக்கும் இடையிலான 13 வருட இணைபிரியாக் காதலை அவர்களது கடிதங்கள் காவியமாக்குகின்றன. பிரான்ஸ் வரலாற்றில் மற்றுமொரு உன்னத காதலாக எல்லோர் மனங்களையும் இது கட்டிப்போட்டுள்ளது.

13 வருட காதலின் போது எழுதப்பட்ட 860 கடிதங்கள் அவரது மகளால் சேகரிக்கப்பட்டவை. 1300 பக்கங்களைக் கொண்ட கடிதத் தொகுப்பின் முன்னுரையில், "இந்தக் கடிதங்கள் உலகை மேலும் விசாலமானதாகவும், ஒளி நிறைந்ததாகவும் ஆக்கும். அவர்களின் காதல் எங்களிடமும் அன்பின் வலிமையை உணர்த்தும் என அவரது மகள் குறிப்பிட்டுள்ளார்.





## யுனஸ்கோ தலைவியாக Audrey Azoulay

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான UNESCO (United Nations Educational, Scientific and Cultural Organization) தலைவியாக பிரான்சின் முன்னாள் கலாச்சார அமைச்சரான Audrey Azoulay தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னாள் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் நீண்டகால கலாச்சாரத்துறைசார் பிரத்தியேக ஆலோசகர் என்பது குறிப்பிடத்தக்கது. Audrey Azoulay க்கு பிரான்சுவா ஹொலந்த், இம்மனுவல் மக்ரோன் முதல் பல அமைச்சர்களும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இம்மனுவல் மக்ரோன் தனது வாழ்த்துரையில் "உலகில் விஞ்ஞானம், கல்வி, மற்றும் கலாச்சாரம் மேம்பட பிரான்ஸ் எப்போதும் UNESCO வுடன் தொடர்ந்து துணை நிற்கும்" எனத் தெரிவித்துள்ளார்

## EDF மற்றும் Engie க்கு போட்டியாக களமிறங்கியுள்ள 'Total spring'



உலகின் மாபெரும் எண்ணெய் விநியோக நிறுவனங்களில் ஒன்றும், பிரான்சில் அதிக அளவு வருமானம் ஈட்டும் நிறுவனங்களில் முதன்மையானதுமான Total நிறுவனம் பிரான்சில் தனது புதிய சேவையை அறிமுகம் செய்யவுள்ளது.

'Total spring' எனப்பெயர் சூட்டப்பட்ட தமது மின்சாரம் மற்றும் Gaz விநியோக சேவையை தனியாருக்கு முன்வைத்துள்ளனர். பிரான்சின் முதன்மையான விநியோகஸ்தர்களான EDF மற்றும் Engie க்கு போட்டியாக களத்தில் இறங்கியுள்ளனர். மற்றைய விநியோகஸ்தர்களை விட 10 வீத மலிவான, சூழலுக்கு தீங்கு விளைவிக்காத 100 சதவீதம் பிரான்சில் தயாரிக்கப்படும் எரிசக்தி என விளம்பரப்படுத்தியுள்ளனர். பிரான்ஸ் சந்தையில் 3 மில்லியன் வாடிக்கையாளர்களை வெல்வதே தமது முதல் இலக்காகும் என Total நிறுவனம் தெரிவித்துள்ளது. 1924ம் ஆண்டு தோற்றம்பெற்ற Total நிறுவனம் 100 சதவீத பிரான்ஸ் நிறுவனம் என்பதும் 130 நாடுகளில் 1 லட்சம் ஊழியர்களுடன் செயற்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மருத்துவத்துறை மாணவர்களை Lycée யிலேயே இனம் கண்டு வழிநடத்த முயற்சி

**பிரான்சில்** மருத்துவர்களின் பற்றாக்குறை அதிகரித்துவரும் வேளையில் மருத்துவக் கல்வியை தொடரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் Agnès Buzyn, கவலை தெரிவித்துள்ளார்.



ஒரு மாணவரை மருத்துவராக்க 12 வருடங்கள் தேவைப்படுகிறது. மருத்துவக் கல்வி கற்க முனையும் மாணவர்கள் முதலாவது வருடத்துக்குள் நுழைவதற்கு முன்னரே ஒரு தெரிவு முறைக்கு உட்படுத்தப்படுவது அவசியமானது. இத்தெரிவு முறை மூலம் ஒரு 18 வயது மாணவன் இரண்டு வருடங்களை வீணாக தொலைக்கவேண்டிய அவசியமில்லை. இல்லையேல் மிகவும் கடினமான மருத்துவக்கல்வியைத் தொடரவும் முடியாமல் விலகி எத்தகைய உயர்கல்வியைத் தொடர்வதெனவும் தெரியாமல் தவிக்கவேண்டிய சூழ்நிலை தொடர்ந்தும் நீடிக்கும் எனவும், Bac scientifique ல் 'très bien' அல்லது 'bien' தகைமை பெற்றிருந்தால் மட்டுமே இனி மருத்துவக்கல்லூரிக்குள் நுழைவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இல்லாத பட்சத்தில் விருப்பு இருப்பினும் சாத்தியக்கூறுகள் இல்லை என அமைச்சர் இத் தெரிவு முறைக்கு விளக்கம் கொடுத்துள்ளார்.

இம்முறையால் மாணவர்களை வெகுவிரைவில் சரியான உயர்கல்வித் தெரிவில் வழிநடத்த முடியும் எனவும். இன்றைய மாணவர்களை Lycée யிலேயே இனம் கண்டு வழிநடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். ●





**சங்கீதா அச்சகம்**

**39, Bd. de la Chapelle - 75010 Paris**
M°: La Chapelle
sangeethafrance@gmail.com
**Tél. / Fax : 01.44.72.08.94**



# Ile-de-France பகுதியிலேயே சுத்தமான குடிநீர்!

**பிரான்சில்** Ile-de-France ல் வாழும் மக்களே மிகவும் சுத்தமான குடிநீரைப் பெறுகின்றனர் என குடிநீர் விநியோக ஆய்வகம் தெரிவித்துள்ளது. Ile-de-France ல் வசிக்கும் மக்களின் வீடுகளில் 99,93% வீதம் சுத்தமான தண்ணீர் கிடைக்கின்றது எனவும், பாரிசிலும், 92 பகுதியிலும் சுத்தத்தின் தரம் பல தடவைகளில் 100 சதவீதத்தை எட்டுவதாகவும் தெரிவித்துள்ளனர். தனிமனித வருமானம் அதிகமான நகரங்களில் தண்ணீரின் சுத்தம் தரமாக உள்ளது எனவும் மற்றைய நகரங்களில் குடிநீரின் தரம் சராசரியாக 98 சதவீதமாக பின்தங்கியுள்ளதாகவும் ஆய்வு நிறுவனமான Fluksaqua தெரிவித்துள்ளது.

Ile-de-France ஐத் தொடர்ந்து Pays de la Loire (99,85%) Bretagne (99,81%) சுத்தமான குடிநீரைப் பெறுகின்றன. குடிநீரின் தரம் குடிநீரில் காணப்படும் நுண்ணுயிர்களின் அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றது.



# இரண்டு 'Brigitte Macron' பெயர் மாற்றக் கோரிக்கை!

பிரான்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோனின் துணைவியாரின் பெயரோடு பிரான்சில் வாழும் இன்னுமொரு பெண்ணின் பெயரினை மாற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

'Brigitte Macron' என்னும் இரண்டாவது பெண் பிரான்சில் வரி இலாகா அலுவலகத்தில் அதிகாரியாகப் பணியாற்றிவருகிறார்.

மே மாதத்தில் இம்மனுவல் மக்ரோனின் வெற்றியைத் தொடர்ந்து facebook மற்றும் மற்றைய சமூக ஊடகங்களில் தனது பெயரை மாற்றுமாறு கோரிக்கை வைத்தனர் எனவும், பின்னர் மீண்டும் அதிபரின் அலுவலகமே நேரடியாகத் தொடர்பு கொண்டு பெயரை மாற்றக் கோரியிருந்தது எனவும் தெரிவித்துள்ளார். இது எனது பெயர் மற்றும் குடும்பப் பெயர் ஆகும். எதற்காக மாற்ற வேண்டும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

உண்மைதான் தினமும் சமூக ஊடகங்களில் நான் தான் அதிபரின் துணைவியார் என எண்ணி பல நட்புக் கோரிக்கைகள் வந்த வண்ணமேயுள்ளன! இது ஒரு இடைஞ்சல் தான்! இருப்பினும் எனது அலுவலக மேசையிலிருக்கும் எனது பெயர் பலகையை கவனிக்கும் மக்களின் ஆச்சரியப் புன்முறுவல் என்னை ஒரு போதும் தொந்தரவு செய்வதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# வீதியில் தொழுகை நடாத்த தடை!

**Mairie de Clichy** பகுதி வீதியில் தொடர்ந்தும் தொழுகை நடாத்தி வரும் இஸ்லாமிய மக்களின் வீதித்தொழுகையை தடைசெய்யக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அரசை நோக்கிய கோரிக்கை பேரணியாக Clichy மாநகரசபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. Les Républicains கட்சிசார் Clichy மாநகர சபைத் தலைவரான Rémi Muzeau தலைமையில் எதிர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.



நீண்ட நாட்களாக இஸ்லாமிய மக்கள் ஒன்று கூடி தொழுகை நடாத்தி வந்த மண்டபத்தை மாநகரசபை மீளப்பெற்று தொழுகை செய்ய தடை விதித்தது. இந்நிகழ்வைத் தொடர்ந்து மார்ச் மாதம் முதல் வாராவாரம் இஸ்லாமிய மக்கள் தமது வெள்ளிக்கிழமைத் தொழுகையை மாநகரசபை முன் திடலில் தொடர்ந்து செய்து வருகின்றனர். 500 முதல் 800 பேர் வரை கூடும் இத் தொழுகை பொதுமக்களுக்கு இடைஞ்சல் விளைவிக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டு மாநகரசபை பல வழிகளில் தடுக்க முயன்றிருந்தனர். முயற்சிகள் பலனளிக்காத பட்சத்தில் அரசை நோக்கி போராட்டமாக முன்னெடுத்துள்ளனர், எனக் குறிப்பிட்ட Ile-de-France Républicains கட்சித் தலைவரும், ஆலோசகருமான Valérie Pécresse அரசை உடனடியாக முடிவெடுக்கக் கோரியுள்ளார்.


மாநகரசபை தமது மண்டபத்தை இளைஞர்களுக்கான கலாச்சார நிகழ்வுகளுக்கான மண்டபமாக மாற்றியமைத்துள்ளது. அதை நாங்கள் வரவேற்கின்றோம். இருப்பினும் எமக்கும் கிறிஸ்தவர்களைப் போன்றோ யூத மக்களைப் போன்றோ செபிப்பதற்கான இடம் அமைய உதவவேண்டியதும் அரசின் கடமையே எனத் தெரிவித்துள்ள இஸ்லாமிய மக்கள் பிரதிநிதி, எம்மையும் மதித்து பேச்சுவார்த்தைகளுக்கு அரசு முன்வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# பிரான்சில் மதங்கள்...

பிரான்ஸ் மக்களில்
61 சதவீதமான மக்கள் மதங்கள் மனிதர்களுக்கு நல்லது செய்வதை விட தீமையையே விளைவிக்கின்றது எனத் தெரிவித்துள்ளனர்.

34 சதவீதமான மக்கள் மதத்தைச் சரியான விதத்தில் பின்பற்றுவதன் மூலம் மனிதனின் நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன எனவும்

மிகவும் குறைவாக 16 சதவீதமானவர்களே ஒரு மதத்தைப் பின்பற்றுபவரால் மட்டுமே சரியான குடிமகனாக இருக்க முடியும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.








# 'Made in France'

**பிரான்ஸ் அதிபர்** இம்மனுவல் மக்ரோன் தனது ஆடை வடிவமைப்பாளரை மாற்றம் செய்துள்ளார். பிரான்சில் தயாரிக்கப்படும் ஆடைகளையே இனி அணிய முடிவெடுத்துள்ளேன் எனவும் அதி–பர் தெரிவித்துள்ளார். பிரான்சில் இந்த 'Made in France' பிரயோகம் மக்கள் மத்தியில் தீவிரமாக முன் வைக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. எனது ஆடை வடிவமைப்பாளரை மாற்றியதன் மூலம் நானும் பிரான்ஸ் மக்களுக்கு முன் மாதிரியாக இருக்க விரும்புகிறேன் என அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரை அதிபரின் ஆடைகள் Jonas et Cie யினால் வடிவமைக்கப்பட்டதாகும். ஒரு costume ன் விலை 450 யூரோக்களாகும். தற்போது Smuggler வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்படுகின்றது. தையலகம் பிரான்சில் Limoges நகரில் அமைந்துள்ளது என்பதே முதற்காரணமாகும். இருப்பினும் made in France costume ன் விலை 800 முதல் 1200 யூரோக்கள் வரையாகும். விலை அதிகமாக இருப்பினும் பிரான்ஸ் தொழிற்துறையினரின் பொருளாதார வளர்ச்சியென்பது எமக்கு முக்கியமாகும் என அதிபர் தெரிவித்துள்ளார்.



**பிரான்சில்** தொடர்ந்து மக்கள் 'Made in France' பொருட்களின் பக்கம் திரும்பிய வண்ணமுள்ளனர் எனஅறியப்படுகின்றது. உலக அளவிலேயே பிரான்ஸ் தயாரிப்புகள் எப்போதுமே மதிப்புத்தான். தரம், பாரம் பரியம் மற்றும் செயற்திறன் என்பவை எப்போதும் மக்களைக் கவர்கின்றது என 'Origine France garantie' அமைப்பின் தலைவரும் UDI பாராளுமன்ற உறுப்பினருமான Yves Jégo தெரிவித்துள்ளார்.

100 சதவீத பிரான்ஸ் தயாரிப்புகளாக கண்ணாடிகள், உள்ளாடைகள், ஆடைகள் எனப்பல made in France தயாரிப்புகள் பிரான்சில் 27 தயாரிப்பு நிறுவனங்களுடன் இணைந்து தாம் முன் வைத்து வருவதாகவும் Yves Jégo தெரிவித்துள்ளார்.

- 74 வீத பிரான்ஸ் மக்கள் பிரான்சில் தயாரிக்கப்படும் பொருள் எனின் அதிக விலை கொடுக்கவும் தயங்க மாட்டோம் எனத் தெரிவித்துள்ளனர்.


- 45 வீத பிரான்ஸ் மக்கள் தாம் வாங்கும் பொருள் எங்கு தயாரிக்கப்படுகின்றது என்பது முக்கியம் எனவும்,

- 91 வீத பிரான்ஸ் மக்கள் பிரான்ஸ் தயாரிப்பு பொருட்களை நுகர்வதன் மூலம் மட்டுமே பிரான்சின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முடியும் என நம்பிக்கையுள்ளவர்கள் எனவும் Yves Jégo தெரிவித்துள்ளார்.

## UNESCO விலிருந்து அமெரிக்காவும் இஸ்ரேலும் வெளியேறியுள்ளனர்!

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான UNESCO அமைப்பிலிருந்து அமெரிக்காவும் இஸ்ரேலும் வெளியேறியுள்ளன. UNESCO யூத இனத்தவர்களுக்கு எதிராக செயற்படுகின்றது எனக் காரணம் காட்டி இரண்டு நாடுகளும் தமது வெளியேற்றத்தைப் பதிவு செய்துள்ளன.

உலகின் பல பாரம்பரியம் மிக்க பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளை UNESCO பட்டியலிட்டு அவற்றை தமது Patrimoine mondial திட்டத்தின் கீழ் பராமரித்து வருகின்றது. இந்த உலகப்பாரம்பரிய களப்பட்டியலில் ஆபத்தான நிலையிலுள்ள களங்களின் வரிசையில், அண்மையில் பாலஸ்தீனர்களின் நகரமான Hébron நகரத்தை இணைத்திருந்தது. இஸ்ரேலியர்கள் தமது மண்ணாக உரிமை கோரும் இந்நகரில் பாலஸ்தீனியர்களின் பாரம்பரியங்கள் அழியும் நிலையில் உள்ளது என்பதை UNESCO சுட்டிக் காட்டியிருந்தமையே அமெரிக்கர்களினதும், இஸ்ரேலினதும் வெளியேற்றத்திற்கு முக்கிய காரணமாகும்.





தவறாய் புரிந்துகொள்வதைவிட
புரிந்துகொள்ளாமலே இருப்பது
மேலானது...

கலைவண்ணம் – 2017
10. 12. 2017
30, rue Lopez et Jules Martin
Space Reanaudi
M°: Fort Aubervilliers

ஆழிப்பேரலை சுனாமி
13வது நினைவு வணக்க நிகழ்வு
26.12.2017 மாலை 4மணி
51, Ave. du Général Leclerc
93270 Sevran




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



## பிரான்ஸ் திரைப்படங்களில் புகைப்பிடிக்கமுடியாது!

பிரான்சில் எதிர்வரும் காலங்களில் திரைப்படங்களில் புகைப்பிடிக்கும் காட்சிகள் இடம்பெறமாட்டாது.

தொடரும் கடன் சுமையிலிருந்து Sécurité sociale ஐ எவ்வாறு காப்பாற்றுவது தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் புகைப்பிடித்தலால் நோய்களில் விழுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் இந்நிலை Sécurité socialeக்கு பெரும் செலவீனமாக இருப்பதும் விவாதிக்கப்பட்டது.

2012ல் புற்றுநோய் ஆய்வகம் நடாத்திய கருத்துக்கணிப்பில் பிரான்சில் வெற்றி பெற்ற 180 திரைப்படங்களில் 80 சதவீதமான திரைப்படங்கள் புகைத்தலை ஊக்குவிக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன எனச் சுட்டிக் காட்டியிருந்தனர். திரைப்படங்கள் மற்றும் தொலைக் காட்சித் தொடர்களின் பெரும்பான்மைப் பார்வை யாளர்கள் சிறுவர்களும் இளைஞர்களுமே ஆகும். இந்நிலை இளைஞர்களை புகைக்க ஊக்குவிக்கும எனவும் தெரிவித்திருந்தனர்.

இவ்வறிக்கையை முன்வைத்து நடாத்தப்பட்ட விவாதத்தையடுத்து பிரான்ஸ் சுகாதாரத்துறை அமைச்சர் Agnés Buzyn சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கலாச்சாரத்துறை அமைச்சரை தொடர்பு கொண்ட அமைச்சர் புகைப்பிடித்தலை தடை செய்வது தொடர்பான விவாதங்களை திரைப்படத்துறையினர் மத்தியில் முன்னெடுக்க கோரியுள்ளார். 2016ம் ஆண்டு உலகச்சுகாதார மையம் புகைப்பிடிக்கும் காட்சிகள் அதிகமுள்ள திரைப்படங்களை 18 வயதிற்குக் கூடியோருக்கான திரைப்படங்கள் என சான்றிதழ் வழங்குமாறு கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.



## பிரான்ஸ் : 16 ஆயிரம் மக்கள் சேரிவாழ்க்கை வாழ்கின்றனர்!

பிரான்சில் 570 Bidonvilles (சேரிகளில்) 16 ஆயிரம் மக்கள் வாழுகின்றனர். இவர்களில் 36 சதவீதமானவர்கள் குழந்தைகள். கடுங்குளிர்காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் பிரான்ஸ் இம்மக்களைக் கண்டும் காணாமலும் இருப்பது கவலைக்குரிய விடயமாகும் என Secours Catholique அமைப்பு தெரிவித்துள்ளது.

பெரும்பாலானவர்கள் Rom இனத்தவர்களாகும், மற்றையவர்கள் வீடு வசதியற்றவர்களாகும். தொடர்ந்து இம்மக்களின் முகாம்கள் தகர்க்கப்பட்டு வெளியேற்றப்பட்டு வந்தாலும் இம்மக்களுக்கு சரியான வதிவிடங்கள் முன்வைக்கப்படாத காரணங்களால் மீண்டும் மீண்டும் சேரிகள் முளைத்த வண்ணமேயுள்ளன. இல் து பிரான்சில் மட்டும் 116 Bidonvilleகள் உள்ளதாகவும் இம்மக்களுக்கு சரியான வழிகளை முன்வைக்க வேண்டியது அரசின் கடமையே எனவும் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் வாழ் மக்களின் குடியுரிமைச் சமத்துவத்தின் அடிப்படையில் குளிர்காலத்தில் இம்முகாம்களைக் கலைக்க முடியாது என்பது புதிய சட்டமாகும். இருப்பினும் இது நிரந்தரத் தீர்வு அல்ல எனவும் விளக்கியுள்ளனர்.
பிரான்ஸ் மக்களோ இத்தகைய சேரி வாழ்க்கை என்பது பிரான்சில் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையுடன் கண்களை மூடி வாழ்வது கவலை அளிப்பதாகவும் Secours Catholique அமைப்பு தெரிவித்துள்ளது.

## பெண்கள் மீதான பாலியல் தொல்லை! கண்ட இடத்தில் தண்டம்!!



பிரான்சின் வீதிகளில் இனிமேல் பெண்கள் மீதான எந்தவிதமான பாலியல் தொல்லைகளுக்கும் கண்ட இடத்தில் வைத்தே அபராதம் அறவிடப்படும். பொது இடங்களில் ஆண்களால் மேற்கொள்ளப்படும் அநாகரீகமான செயற்பாடுகளைக் கட்டுக்குள் கொண்டுவரவேண்டுமென்ற பெண்ணியவாதிகளின் கருத்துக்கு செவிசாய்க்கப்பட்டுள்ளது.

வீதிகளில் பாலியல் தொல்லைக்கான தண்டனை சட்டத்தில் இன்னமும் உள்ளடக்கப்படவில்லை. எனவே அதை விரைவில் இணைத்துக்கொள்ளவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. அடுத்த வருடம் இந்த சட்டத்தை உள்ளடக்குவதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றில் இடம்பெறவுள்ளது.

**தவறை மறைக்க காரணங்கள் தேடும் போதுதான் உண்மையில் தவறுகள் செய்ய ஆரம்பிக்கின்றோம்.**



## பாரிஸ் மக்களே அதிக உணவை வீணாக்குகிறார்கள்!

பிரான்சின் ஏனைய இடங்களில் வாழும் மக்களை விட பாரிசில் வாழும் மக்களே அதிக உணவை வீணாக்குவதாக அண்மைய ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. பாரிசில் வாழ்பவர்கள் சராசரி ஒவ்வொருவரும் வருடத்திற்கு 26kg உணவை வீணாக்குகின்றார்கள். ஏனைய பிரதேசங்களைக் காட்டிலும் இது மூன்று மடங்கு அதிகம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாரிசில் வாழ்பவர்கள் மத்தியில் உணவின் மீதான ஆசை குறைந்துவருவதாகவும், வீடுகளில் உள்ள உணவை மறந்து உணவகங்களில் உட்கொள்வதாகவும் ஆய்வு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அதைவிட தாங்கள் உணவகங்களில் உண்ணும் உணவின் மீதியை வீடுகளுக்குக் கொண்டுசெல்வதையும் அவர்கள் விரும்புவதில்லை.




**அமெரிக்காவின்** ராக்சி நிறுவனமான ஊபர் நிறுவனத்திற்குக் கடும் போட்டியாக பிரான்சில் புதிய ராக்சி நிறுவனம் சேவையை ஆரம்பித்திருக்கின்றது. taxify என்ற நிறுவனம் தனது போட்டி நிறுவனத்தைக் காட்டிலும் 10வீதம் குறைவான கட்டணத்தைத் தன் முதல் இலக்காகக் குறிப்பிட்டுள்ளது. அதன் சாரதிகளுக்கும் அதிக சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஊபர் நிறுவனம் போன்று தொலைபேசிகளில் தரவிறக்கம் செய்வதன் மூலம் இதன் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.



பாரிசில் ஏற்கனவே 2000 ராக்சிகள் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளதாகவும் அதைவிட 3000பேர் முன் பதிவை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. சீனாவிலிருந்து Uber நிறுவனத்தை தன் நாட்டிலிருந்து வெளியேற்றிய Didi Chuxing என்ற சீன நிறுவனமே இந்த நிறுவனத்திற்கு பண உதவியை வழங்கியுள்ளது. ஒரு வருடத்திற்குள் சந்தையின் மூன்றிலொரு பகுதியை பிடித்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாரிஸ் சந்தை ஒரு அமெரிக்க நிறுவனத்தால் மட்டுமே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நிறுவனத்தாலும் அப்படியொரு இடத்தைப் பிடிக்க முடியும் என்பதை நாங்கள் நிரூபிக்க விரும்புகின்றோம் என நிறுவனத்தின் ஸ்தாபகரான 23 வயதேயுடைய Markus Villig தெரிவித்துள்ளார்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும். (குறள் 114)








இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# பிரான்சில் ஐந்து நிமிடத்திற்கு ஒரு கார் களவாடப்படுகிறது!

கடந்த வருடத்தில் மட்டும் பிரான்சில் 108,000 கார்கள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அதன்படி ஐந்து நிமிடத்திற்கு ஒரு கார் காணாமல் போவது தெளிவாகின்றது. மிகவும் துல்லியமான திட்டத்தோடு வலையமைப்பாகச் செயற்படும் சட்டவிரோதக்கும்பலால் இது மேற்கொள்ளப்படுவதாகவும் திருடப்படும் கார்கள் வெளிநாடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு விற்கப்படுவதாகவும் கார் சஞ்சிகையான AutoPlus இன் தலைவர் தெரிவித்துள்ளார். அதிகம் களவு போகும் கார்களின் பட்டியலில் மூன்றாவது வருடமாக Smart ForTwo II முதலிடத்திலுள்ளது.



திருடர்கள் விரும்பும் முதல் 10 கார்கள் :

1. Smart Fortwo II
2. Land Rover Range Rover
3. Land Rover Range Rover Evoque
4. Ford Fiesta
5. Renault Clio 4
6. Seat Leon
7. Citroën DS3 Découvrable
8. Renault Twingo II
9. Renault Mégane 2
10. BMW X5 E70/LCI



## நெப்போலியன் கிரீடத்தின் தங்கஇலை 625,000யூரோ ஏலத்தில்..!

மாவீரன் நெப்போலியனின் கிரீடத்தில் இருந்த ஒரு தங்க இலை 625,000யூரோக்களுக்கு ஏலத்தில் விற்பனைசெய்யப்பட்டுள்ளது.

மாவீரன் நெப்போலியன் தனது முடிசூட்டுவிழாவின் போது அணிந்திருந்த கிரீடத்திலிருந்த இந்தத் தங்க இலை எதிர்பார்க்கப்பட்டதை விட ஐந்து மடங்கு அதிக விலையில் விற்கப்பட்டுள்ளது. 1804ஆம் ஆண்டு முடிசூட்டப்பட்ட பின்னர் கிரீடத்தின் பாரம் காரணமாக ஆறு இலைகள் நீக்கப்பட்டன. ஏனைய இலைகள் முடியை வடிவமைத்த Goldsmith நிறுவனத்தின் உரிமையாளரது மகள்களுக்கு வழங்கப்பட்டன. கிரீடத்தை அலங்கரித்திருந்த இந்த இலை 1980களில் கிரீடம் விற்கப்பட்டபோது அதிலிருந்து நீக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


XPRESS MONEY TRANSFER AGENT
எக்ஸ்பிரஸ் பணமாற்று நிலையம்

• எரிபொருள் நிரப்பு நிலையம் • பணம் அனுப்பும் சேவை • புத்தம்புதிய கைத்தொலைபேசிகள் • தொலைபேசி உதிரிப்பாகங்கள்

- விரைவாகவும் பாதுகாப்பாகவும் சர்வதேச ரீதியில் பணம் அனுப்பிக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும்
- அதிகூடிய மாற்று வீதம்
- குறைந்த சேவைக் கட்டணம்
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினூடான சேவை
- அனைத்து முகவர்களும் ஒரே இடத்தில்
- 2 நிமிடங்களில் எல்லா நாடுகளிலும் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்
- வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்ய

Ria Money Transfer · MoneyGram money transfer · WESTERN UNION MONEY TRANSFER · Sigue MONEY TRANSFER · TEMPO MONEY TRANSFER

லாச்சப்பலில்




நம்பிக்கை – நாணயம் – உத்தரவாதம்

Tél : 01 40 18 07 44
email : express-station@hotmail.com
25, Boulevard de la Chapelle 75010 Paris

Express Station Service 25
Bld. de la chapelle
Métro La Chapelle



# ஆபிரிக்க அகதிகளை வரவேற்கும் பிரான்ஸ்!

**ஐ.நா சபையால்** அங்கீகரிக்கப்பட்ட ஆபிரிக்க அகதிகளை முதன்முதலாக பிரான்ஸ் ஏற்றுக்கொள்ள வுள்ளது. ஐ.நா அகதிகள் நிறுவனத்தால் லிபியாவில் இருந்து நைஜீரியாவிற்கு வெளியேற்றப்பட்ட அகதி-களையே பிரான்ஸ் வரவேற்றுக்கொள்ளவுள்ளது. லிபிய முகாம்களில் மிக மோசமான நிலையில் நாட்களைக் கழித்து வந்த ஆபிரிக்க நாட்டவர்களை UNHCR கடந்த நவம்பர் 11இல் நைஜீரியாவிற்குப் பாதுகாப்பாக கொண்டுசென்றது. அவர்களில் பெண்கள் சிறுவர்கள் உட்பட ஒரு தொகுதியினரை பிரான்ஸ் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் வரும் ஜனவரி மாதமளவில் அவர்கள் பிரான்ஸை வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பாவிற்குள் சட்டவிரோதமாக உள்நுழைவதற்கான இடைத்தங்கல் நிலையமாக லிபியா நீண்டகாலமாக இருந்துவருகின்றது. அவ்வாறு தங்க வைக்கப்படுபவர்கள் நாடுகடத்துவோர் கைகளில் பல துன்புறுத்தல்களை எதிர்நோக்கிவருவது அவ்வப்போது அறியப்பட்டாலும் அதை அமெரிக்க தொலைக்காட்சி வலையமைப்பான CNN வெட்டவெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது. வெறும் 340யூரோவிற்குக் கறுப்பினத்தவர் ஒரு-வரை தோட்டஉரிமையாளருக்கு ஏலத்தில் விற்பனை செய்யும் காணொளியை CNN வெளியிட்டிருந்தது. அதைத்தொடர்ந்து எழுந்த அதிர்வலைகள் அவர்களுக்கான பாதுகாப்பை உலகநாடுகள் உடன-டியாக முன்னெடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

"உள்வாங்கப்படும் அகதிகளில் அனேகமானவர்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளானவர்கள். நரகத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள், அவர்களுக்கான அகதி அங்கீகாரத்தை விரைவில் பிரான்ஸ் வழங்கும். அதே போன்று ஏனைய நாடுகளும் அவர்களை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என OFPRAவின் செயலாளர் நாயகம் பஸ்கால் பிறிஸ் தெரிவித்துள்ளார்.




## வாகனப்பதிவு அட்டை ஓட்டுனர் பத்திரம் online ல் மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும் !

பிரான்சில் நவம்பர் 1ம்திகதி முதல் வாகனங்களுக்கான வாகனப்பதிவு அட்டை (carte grise) மற்றும் வாகன ஓட்டுனர் பத்திரம் ஆகியவற்றை ஒன்லைனில் விண்ணப்பிப்பதன் மூலம் மட்டுமே பெறமுடியும். நவம்பர் முதலாம் திகதி முதல் அனைத்து ஆணையர் அலுவலகங்களிலும் (préfectures) வாகனப்பதிவு மற்றும் ஓட்டுனர் பிரிவுகள் நிரந்தரமாக மூடப்படுகின்றன. வாகனப்பதிவு அட்டையில் முகவரி மாற்றம் விற்பனை முதலியவை https://immatriculation.ants.gouv.fr இணைய வாயிலாக. உதாரணமாக வாகனம் விற்பனை செய்பவர் இணையத்தில் பதிவு செய்வதன் மூலம் ஒரு code கிடைக்கப் பெறுவார். இக் code ஐ வாங்குபவருக்கு பகிரவேண்டும். தொடர்ந்து இக் code ஐ உபயோகித்து புதிய பதிவு அட்டையைப் பெறமுடியும்.
வாகன ஓட்டுனர் பத்திரத்தில் மாற்றங்கள் செய்வதற்கு https://permisdeconduire.ants.gouv.fr இணையத்தளத்தை நாடவேண்டும்.

அறிவாலயம் புத்தகசாலை

இலங்கை, இந்திய சஞ்சிகைகள் பத்திரிகைகள் வாரம் தோறும் பெற்றுக்கொள்ளலாம்!

ஐரோப்பிய நாடுகள் எங்கும் உங்களுக்குத் தேவையான நூல்களை நாம் அனுப்பிவைப்போம்!

7, rue Perdonnet - 75010 Paris
M° : La Chapelle / Gare du Nord
Tél.: 01 44 72 03 34 - Fax : 01 44 72 03 35

Catering Service

உங்கள் வைபவங்களுக்கு தேவையான அனைத்து உணவுவகைகளுக்கும் நாடுங்கள்!!

ருசித்தவர்களிடம் கேட்டுப்பாருங்கள்! எமது தரம்பற்றி..

தொடர்புகளுக்கு :
கனகசுந்தரம்
06.16.50.04.41

# Mahajana Master Institute - Paris.

## பாரிஸ் - மகாஜனா கல்வி நிலையம்

## 10வது ஆண்டு நிறைவில்....

## மேலும் 3 புதிய கிளைகள்..

CELEBRATING 10 YEARS

MAHAJANA Master Institute

மொத்தம் பத்துக் கிளைகள்

ஆங்கிலக்கல்வி
கற்றல் - கற்பித்தல் செயன் முறையில் நாம் பயன்படுத்தும்
**புதிய நுட்பங்களே எங்கள் வெற்றி!**



Mahajana Master Institute-Paris
15 rue Marie et Pierre Curie
89100 Sens
(நகரசபைக்கு அருகாமையில்)

Mahajana Master Institute-Paris
14 rue Mercator
77120 Lieusaint
(நகரசபைக்கு அருகாமையில்)

Mahajana Master Institute-Paris
Villeneuve St. Georges
(புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்)

### எமது கிளைகள்

1. La Courneuve 93 | 2. Cergy 95 | 3. Les Mureaux 78 | 4. Bondy 93 | 5. Goussainville 95
6. Boissy Saint Leger 94 | 7. Paris 75

PRIMAIRE (TOUT NIVEAU) | COLLEGE (TOUT NIVEAU) | LYCEE (TOUT NIVEAU)

- COURS D'ANGLAIS ( Mercredis et Samedis)

Programmes de UNIVERSITY OF CAMBRIDGE / BRITISH COUNCIL
- Starters 7, 8 ans
- Movers 9, 10, 11 ans
- Flyers 12, 13 ans
- KET 13 ans et plus
- PET
- FCE

- SOUTIEN SCOLAIRE (Mercredis, Samedis et Dimanches)

(Tout niveau)
- Niveau Primaire (CP – CM2)
- Niveau Collège (6ème – 3ème)
- Niveau Lycée (2nd – Terminale)

- COURS DE MATHEMATIQUES (Samedis et Dimanches)
- Niveau Collège (6ème – 3ème)
- Niveau Lycée (2nd – Terminale)

- COURS DE FRANÇAIS (Samedis et Dimanches)
- Niveau Collège (6ème – 3ème)
- Niveau Lycée (2nd – Terminale)

**7, Rue Emile Zola,93120 La Courneuve.**
RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்
Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

**Renseignements et Inscriptions au 06 11 68 82 50 / 06 28 61 28 63.**



# EGLISE EVANGELIQUE DE SION

## சீயோன் சுவிசேஷ சபை

## ஆலய இடமாற்றம்

புதிய முகவரி

**4 Avenue Armand Esders,**
**93150 Le Blanc-Mesnil**
(Leclerc drive அருகாமையில்)

*RER :* Blanc Mesnil
*Bus :* *620* இறங்குமிடம் : **Docteur Calmette**
*609* - La Courneuve லிருந்து Le Bourget வழியாக..
இறங்குமிடம் : **Rond Point Pablo Neruda**
*350* - Gare de L'est லிருந்து La Chapelle வழியாக..
இறங்குமிடம் : **Descartes - Renault**
*627* - Aulnay S/Bois (Gare) லிருந்து
இறங்குமிடம் : **Rond Point Pablo Neruda**
*610* - Gare de Dugny லிருந்து Le Bourget Air-port வழியாக..
இறங்குமிடம் : **Armand Esders**

RER லிருந்து வாகன ஒழுங்கும் செய்துதரப்படும்.

வாகனங்களில் வருபவர்களுக்கு
GPS : Z.I du Coudray / A1/A3/D40/ E15

**La Plaine St.Denis ல் நடைபெற்ற ஆராதனை தற்போது புதிய முகவரியில் நடைபெற்று வருகிறது!**

**ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4.30 மணிக்கு**

தொடர்புகளுக்கு : 06.61.18.95.30 / 06.99.11.19.68 / 07.8358.89.40 / 06.51.12.65.85



**உன்னிடமுள்ள மிகச் சிறந்ததை இவ்வுலகிற்கு கொடு.**
அது போதுமானதாக இல்லாமல் இருக்கலாம்.
எது எப்படியானாலும் நீ பெற்றுக்கொண்டுள்ள மிகச்சிறந்ததை
இவ்வுலகிற்கு கொடு! - அன்னை திரேசா

லாச்சப்பலில்..

# ASI BOUCHERIE

சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும்
உங்கள் தேவைக்கேற்ப...
அனைத்து இறைச்சி வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்!

**195, rue du Fbg. St Denis -75010 PARIS**
(Métro : La Chapelle ou Gare du Nord)



HALAL

Tél.: 01 42 05 23 78

# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
**திரு. அருளம்பலம் கலியுகவரதன்**
(மண்கும்பான் - பிரான்ஸ்)
தோற்றம் : 07.06.1968
மறைவு : 09.11.2017



அமரர்
**திருமதி. அன்ரனிராஜா பத்திமா**
(யாழ். நாவாந்துறை - பிரான்ஸ்)
தோற்றம் : 05.11.1951
மறைவு : 05.10.2017



அமரர்
**திருமதி. Joseph Lourdemarie**
(பிரான்ஸ்)
தோற்றம் : 16.01.1933
மறைவு : 26.10.2017



அமரர்
**திருமதி. லோறன்ஸ் சின்னப்பிள்ளை**
(பிரான்ஸ்)
தோற்றம் : 16.11.1941
மறைவு : 09.10.2017



அமரர்
**திருமதி. கார்த்திகேசு சரஸ்வதி**
(பிரான்ஸ்)
தோற்றம் : 23.07.1932
மறைவு : 03.10.2017



அமரர்
**திரு. மரியாம்பிள்ளை ஜோசேப்**
(யாழ்ப்பாணம் - பிரான்ஸ்)
தோற்றம் : 17.03.1947
மறைவு : 20.10.2017



அமரர்
**திரு. கந்தர் தம்பிராசா**
(பிரான்ஸ்)
தோற்றம் : 26.07.1942
மறைவு : 25.10.2017



அமரர்
**திரு. நாகலிங்கம் பஞ்சலிங்கம்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 23.05.1960
மறைவு : 13.10.2017



அமரர்
**துரையப்பா ஜோசேப் ரவிச்சந்திரன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 20.04.1962
மறைவு : 07.08.2017



அமரர்
**செல்வி. கிருசாந்தன் பகிஷா**
(மாதகல் - பிரான்ஸ்)
தோற்றம் : 19.11.2001
மறைவு : 16.10.2017



அமரர்
**திரு. அம்பலவானர் பாலசிங்கம்**
(நாராந்தனை - கொடிகாமம்)
தோற்றம் : 12.10.1929
மறைவு : 18.09.2017



அமரர்
**திருமதி. விஜயரத்தினம் சோதிமலர்**
(அராலி)
தோற்றம் : 15.04.1966
மறைவு : 17.11.2017



அமரர்
**திரு. கனகரட்ணம் கலைதாசன்**
(யாழ்நகர் இலங்கை)
தோற்றம் : 03.12.1959
மறைவு : 20.11.2017



அமரர்
**திரு. தியாகராஜா சுதர்சன்**
(வயாவிளான் - பிரான்ஸ்)
தோற்றம் : 18.04.1985
மறைவு : 11.11.2017



அமரர்
**திருமதி. கந்தசாமி குலேந்திரவதி**
(பிரான்ஸ்)
தோற்றம் : 08.05.1952
மறைவு : 13.11.2017

## சோம்சலீசே நத்தார் கால தெருவோரச் சந்தைக்கு
# அனுமதி மறுப்பு

பாரிஸ் நகரின் பாரம்பரிய அழகு, மக்களின் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு போன்ற முக்கிய காரணங்களால் இந்த வருடம் சோம்சலீசே பெரும் வீதியை அலங்கரிக்கும் நத்தார் கால தெருவோரச் சந்தைக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 16 வருடமாக இடம்பெற்றுவரும் பாரிஸின் நந்தார் காலச் சந்தைக்கு வருடம்தோறும் 15 மில்லியன் மக்கள் வருகைதருவது குறிப்பிடத்தக்கது. அதை விட அங்கே விற்கப்படும் பொருட்கள் பாரிசின் தரத்தை பிரதிபலிப்பதாகவோ பாரிசில் தயாரிக்கப்பட்டவையாகவோ இல்லை என்ற ஆதங்கமும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதைவிட London eye இனை ஒத்த பெரும் வட்ட இராட்டினமும் 2018இல் அகற்றப்படவுள்ளது. சோம்சலீசே வீதியின் முக்கியத்துவத்தை பாரம்பரியத்தை இந்த இராட்டினம் சீர்குலைப்பதாகக்



நாங்கள்
பெற்றோர்களிடமிருந்து
கற்றுக்கொண்டதை விட
பிள்ளைகளிடமிருந்தே
அதிகம் கற்றுக்கொள்கிறோம்.


காக்கைச் சிறகினிலே மாத இதழ்
முன்னெடுக்கும்
கவிஞர் கி பி அரவிந்தன்
நினைவு இலக்கியப் பரிசு
'உலகத் தமிழ்க் குறுநாவல் போட்டி 2018'
தொடர்புகளுக்கு :
kipian2018kaakkaicirakinile
@gmail.com


உங்கள் மனம்
அழகானதாக இருந்தால்
நீங்கள் காணும் காட்சிகளும்
அழகாகவேஇருக்கும் !




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# 67 வது உலக அழகி

**67வது உலக அழகியாக** இந்தியாவைச் சேர்ந்த Manushi Chhillar தெரிவாகியுள்ளார். 1951ம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் உலக அழகிப் போட்டிகளில் Manushi 6வது இந்தியராகும். ஐஸ்வர்யா ராய், பிரியங்கா சோப்ரா வரிசையில் இன்று Manushi. சீனாவில் நடைபெற்ற உலக அழகிப்போட்டியில் ஒற்றைக்கேள்வியில் பல புள்ளிகளை அள்ளி கிரீடத்தை தன் வசப்படுத்தியுள்ளார். மருத்துவக் கல்லூரி மாணவியான Manushiன் எதிர்காலக்கனவு என்ன என்ற கேள்விக்கு, "எனது இலட்சியம் இருதய அறுவை சிகிச்சை வல்லுனராவதும் இந்தியாவின் ஏழை மக்களுக்கு பணி–புரிவதுமே எனத் தெரிவித்துள்ளார்".

பெற்றோர்கள் இருவரும் இந்தியாவில் மிகப்பிரபலமான சத்திரசிகிச்சை நிபுணர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கனவு நிறைவேற Bollywood இடம் கொடுக்குமா என்பது கேள்விக்குறியே!

பிரான்சைச் சேர்ந்த அழகி Aurore Kichenin முதல் ஐந்துக்குள் வந்து பிரான்சிற்கு பெருமை சேர்த்துள்ளார். 1953ல் பிரான்சைச் சேர்ந்த Denise Perrier உலக அழகியாகத் தெரிவானார். 1953 இற்குப் பின்னர் எந்தவொரு பிரான்ஸ் அழகிகளாலும் கிரீடத்தை சூட்டிக் கொள்ள முடியவில்லை. இதுவரை அதிக உலக அழகிகளை கொண்ட நாடுகளில் இந்தியாவும் வெனிசுலாவும் 6 அழகிகளுடன் முதல் வரிசையில் உள்ளன. அடுத்து இங்கிலாந்து 5 அழகிகளுடன் உள்ளது.

## அவசரகாலத் திட்டமொன்றை அமுல் படுத்துக!
### – பிரான்ஸ் பெண்கள் கோரிக்கை

கலைத்துறை, ஊடகம், திரைப்படத்துறைகளிலிருந்து கிட்டத்தட்ட 100 பிரான்ஸ் பெண்கள் "அவசரகாலத் திட்டம்" ஒன்றை அமுல்படுத்துமாறு அதிபர் மக்ரோனிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். பிரான்ஸில் தற்போது தலைதூக்கி வரும் பெண்கள் மீதான வன்முறையை கட்டுப்படுத்துமாறு உருக்கமானதும் கோபத்தை வெளிப்படுத்துவதுமான ஒரு கடிதத்தை அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.


"பிரான்சில் இரண்டில் ஒரு பெண் ஏதோவொரு விதமான பாலியல் வன்முறைக்கு முகங்கொடுக்கின்றனர். பலர் இப்போது வீதியோரங்களில் பாடுவதில்லை. வீதிகளில் செல்லும் போதும் பொதுமக்களைச் சந்திக்கும் போதும் இதை நீங்கள் உணர்வதில்லையா? நாங்கள் அந்த இரண்டில் ஒரு பெண்களே." எனத் தொடரும் கடிதத்தில் ஐந்து முக்கிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் பிரான்சில் வதியும் 100 முக்கிய பெண்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

வீதிகளில் போன்றே வீடுகள் மற்றும் வேலைத் தளங்களிலும் இது தொடர்கின்றது. முறைப்பாடுகள் கூட கவனம் செலுத்தப்படுவதில்லை. அவ்வாறு முறைப்பாடு செய்யும் பெண்களிடம் நீங்களே தூண்டுதலாகவும் உடந்தையாகவும் இருக்கின்றீர்கள் என அதிகாரிகள் தட்டிக்கழிக்கின்றார்கள் எனவும் கோபாவேசமாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


Tel (office): 0033 148371675
Fax : 0033 148450956
For Live Programs: 0033 148321540
FB : TRT TAMIL OLLI
Mail : trtnews@hotmail.fr
Website: : www.trttamilolli.com
TRT Tamil Oli

மண்டைதீவு திருவெண்காடு
சித்திவிநாயகர்
ஆலய இணைய முகவரி
thiruvenkadumandaitivu.com


## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – இல. 32




**இடமிருந்து வலம்**

1. ஒன்றாக இருந்து பிரிந்து செல்லுதல் (5)
3. ஒரு வகை மின் (3) (மாறியுள்ளது)
4. பெரும்பாலும் மகிழ்ச்சியான நிகழ்வுகளில் பரிமாறப்படும் ஒரு இனிப்பான உணவு (4)
5. மதுரை எரிய கண்ணகி இட்டது (3) (மாறியுள்ளது)
6. ஒரு வகைப்பூ, மாலை தொடுக்க முடியும் (4)
8. இந்தியாவில், தமிழகத்தில் வெளியாகும் ஒரு முன்னணி நாளிதழ் (4)
10. நடிகர் அஜித்தை இப்படியும் அழைக்கிறார்கள் (2)
11. இளவேனில், கோடை, இலையுதிர் மற்றும் குளிர்காலம் ஆகியவை ஒரு வருடத்தின் … ஆகும் (6)
12. சேகரித்து சேமித்து வைக்கப்படும் கோப்புகள் (4)
13. வீடற்றவன் நாடற்றவன் (3) (மாறியுள்ளான்)
14. தட்டிசைக் கருவி (5)
16. மருந்து பயன்பாடு கொண்ட தாவரம் (3)

**மேலிருந்து கீழ்**

1. கோவில்களில் கடவுளுக்குப் படைத்த பின் பக்தர்களுக்கு வழங்கப்படுவது (5)
2. நோய் (3)
7. குன்று அல்லது பாறைகளாலான உயர்வான நிலப்பகுதி (2)
8. இலங்கையின் கிழக்கே இயற்கையான துறைமுகத்தைக் கொண்ட நகரம் (6)
9. 1993ல் வெளியான கமல்ஹாசன் நடித்த திரைப்படம் (4)
10. கணவன், மனைவி (4)
12. ஆசிரியர் (3)
15. பெரும்பாலும் தமிழர் திருமணங்களில் பெண்களுக்கு அணிவிக்கப்படுவது (2)

✔ உங்கள் பதில்களை 10 தை 2018 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

**நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.30ல் பரிசு பெறுபவர்கள்.**

1. தாவீது ஞானசிங்காரம் Le Blanc Mesnil
2. ஜெனோஜா ராஜசிங்கம் Drancy
3. தீபிகா சிவலிங்கம் Montreuil

**சரியான விடை எழுதியவர்கள் :**

- நிருபன் ஜெயராஜ் Le Blanc Mesnil
- புனிதமலர் Paris 13
- திருமதி. நிவேதிகா சந்திரன் Bondy
- ராஜன் ரவிக்குமார் Drancy

**போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !**



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# பாவனையிலுள்ள முக்கிய மருந்துகளுக்கு தடை!



**பிரான்ஸ் மருந்தகங்களில்** மருத்துவரின் பரிந்துரையின்றி 4000 மருந்துகளை நேரடியாக பெறமுடியும். இவற்றில் 62 மருந்துகளை மீள்பரிசோதனை செய்யுமாறு நுகர்வாளர் அமைப்பான «60 millions de consommateur», சுகாதாரத்துறை பரிசோதனையாளர்களிடம் பணித்திருந்தது.

மருந்தியல் அங்கீகாரம் வழங்கும் ஆய்வகமும் பிரான்ஸ் மருத்துவ அக்கடமியும் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளைத் தொடர்ந்து 62 மருந்துகளில் 13 மருந்துகளைத் தவிர்த்து மற்றயவை உடனடியாக விற்பனையிலிருந்து விலக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளன.

பெரும்பாலான மருந்துகள் இருமல், தும்மல், தொண்டை நோ, தலையிடி போன்ற சாதாரண நோய்களுக்காக பெரிய விளம்பரங்களுடன் விற்பனை செய்யப்படும் "கொக்டைல்" வகை மருந்துகளாகும். இவற்றில் இரண்டில் ஒரு மருந்து உடல்நலத்திற்கு மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடியவை. குறிப்பாக இருதயம், சுவாசம் தொடர்பான உபாதை–களை ஏற்படுத்தக்கூடிய கலவை கொண்டுள்ளவையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆய்வுகளில் தப்பிய 13 மருந்துகளில் Vicks Vaporub, Gaviscon menthe, Forlax 10g, Maalox ஆகியவை அதிகம் மக்களால் பயன்படுத்தப்படும் மருந்துகளாகும்.
விற்பனையில் கொடிகட்டிப்பறக்கும் சாதாரண தடிமனுக்கு எதிரான star மருந்துகளான Actifed Rhume, Dolirhume மற்றும் Nurofen Rhume ஆகியவை தடைசெய்யப்பட்டுள்ளன.

## பிரான்சின் முதலாவது நிர்வாண உணவகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.



O'naturel எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த உணவகம் பாரிசின் தென்மேற்குப் பகுதியில் வீதியோரத்தில் அமைந்துள்ளது. இங்கே செல்பவர்களுக்கு வாசலிலேயே முக்கிய விதிமுறைகள் அடங்கிய குறிப்பேடு வழங்கப்படும். ஆடைகளைக் கழற்றி வைக்க தனிப்பட அறை உள்ளது. எவரும் கைத் தொலைபேசியும் பாவிக்கமுடியாது. பதின்மவயதினர் கட்டாயம் பெரியவர்களுடனேயே செல்லவேண்டும். அவர்களுக்கு ஆடை அணிந்திருக்க அனுமதியுண்டு. அங்கே ஒருவரை உற்றுநோக்கிப் பார்ப்பது அல்லது அதிசயமாகப் பார்ப்பது போன்றவை விதி மீறலாகப் பார்க்கப்பட்டு வெளியேற்றப்படுவர்.

## உலகின் விலையான ஓவியம்!



**1958 ம் ஆண்டு 45 ஸ்ரேலிங் பவுண்சிற்கு** விற்பனையான 'Salvator Mundi' ஓவியத்தின் இன்றைய விலை 450.3 மில்லியன் டொலர்கள்.
«Salvator Mundi» என்றால் உலகத்தின் மீட்பர் என்று அர்த்தமாகும். 45cmx65cm அளவுடைய இந்தப் படைப்பு 1958ம் ஆண்டில் விற்பனையானபோது யாரால் தீட்டப்பட்ட ஓவியம் என்பது அப்போது அறியப்பட்டிருக்கவில்லை. 2005ம் ஆண்டு மீண்டும் ஏலத்திற்கு வந்தபோதுதான் இப்படைப்பு லியர்னாடோ டார்வின்சியின் கடைசி ஓவியம் என அறியப் பட்டது. அன்று முதல் இவ் ஓவியத்தின் மதிப்பு கிடுகிடுவென ஏறிவிட்டது.
இன்று வரை இப்படைப்பு அருங்காட்சியகங்களில் இடம்பிடிக்காமல் தனியார் வசமே இருந்து வருகின்றது. "உலகத்தின் மீட்பர்" என யேசுகிறிஸ்துவின் உருவப்படம் என சர்ச்சைகளும் கிளம்பாமலில்லை.

தற்போதைய உரிமையாளரான ரஸ்யாவைச் சேர்ந்த Dmitri Rybolovlev சில வருடங்களுக்கு முன்னர் இவ் ஓவியத்தை 127 மில்லியனுக்கே வாங்கியிருந்தார். இன்று இவ் ஓவியமே உலகத்தில் அதிக விலை கூடிய ஓவியமாகும். இதுவரை 1வது இடத்திலிருந்து வந்த பிக்காசோவின் Les femmes d'Alger (version o) ஓவியம் (179, 4 மில்லியன் டொலர்) மற்றும் Modigliani ன் «Nu couché» (170, 4 மில்லியன் டொலர்) ஆகியவை தமது பெறுமதியை வெகுவாக இழந்துள்ளன.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# IESW GUIDANCE CELL

SOCIAL WORK EDUCATION

TEACHING EXCELLENCE & EDUCATIONAL INNOVATION.

CAMBRIDGE UNIVERSITY PREPARATION CENTRE 2017

கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி முலம்
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை (மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்)
நீங்களே உருவாக்கிகொள்ளமுடியும்

**Common European Framework of Reference :**
YLE (Starters, Movers, Flyers), Key, Preliminary, First & Advanced... Etc.

**Educational Centres:**
**Paris - Neuilly-Plaisance - Bondy - Melun - Chelles - Louvre**

**DESIGN & TEACH A COURSE**

- Attitudes & Motivation.
- Prerequisite knowledge & preparedness.
- Group skill & applying knowledge.
- Speaking and writing productive skills

**வீட்டிலிருந்தே படிக்கலாம்!**
உங்கள் பிள்ளைகளுக்காக
கேம்பிறிஜ் பல்கலைக்கழக
கற்கைநெறி வகுப்புகள்

**CREATING A BETTER WORLD - THROUGH EDUCATION FOR OUR CHILDREN.**

**EDUCATIONAL ADVOCACY**

- EDUCATIONAL IS THE MOST POWERFUL WEAPON, WE CAN USE TO CHANGE THE WORLD
- NELSON MANDELA -

UNIVERSITY OF CAMBRIDGE · BRITISH COUNCIL · Cambridge English Young Learners

Tel.: 07 53 76 76 45 - 07 81 34 99 72 - 07 69 68 80 42 - 07 51 33 58 97
06 99 32 72 82 - Email: iesw@live.fr



திருவருள்மிகு ஸ்ரீ சொர்ணாம்பிகாதேவி சமேத
சொர்ணலிங்கேஸ்வரசுவாமி திருக்கோயில்

# சிவன்கோவில் லாக்கூர்னெவ்

04.12.2017 3ம் சோமவாரம்
11.12.2017 4ம் சோமவாரம்

| | |
|---|---|
| 01. 12.2017<br>15. 12.2017 | பிரதோஷ விரதம் |
| 03.12.2017 | 4ம் புரட்டாதிச்சனி விரதம் |
| 06.12.2017 | விநாயகவிரதாரம்பம் |
| 14.12.2017 | ஏகாதசி விரதம் |
| 17.12.2017 | அமாவாசை விரதம் |
| 22.12.2017 | சதுர்த்தி விரதம் |
| 29.12.2017 | சுவர்க்கவாயிலேகாதசி விரதம் |
| 30.12.2017 | சனிப்பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம் |
| 31.12.2017 | நள்ளிரவு சமாதான பூசை |
| 01.01.2018 | பூரணை, ஆங்கில வருட விஷேட பூஜை |
| 02.01.2018 | காலை 4.30 மணிக்கு நடேசரர் அபிஷேகம் |
| 05.01.2018 | சங்கடஹர சதுர்த்தி |
| 12.01.2018 | ஏகாதசி விரதம் |
| 14.01.2018 | காலை தைப்பொங்கல் விழா மாலை சுவாமி வீதியுலா உற்சவம் |
| 16.01.2018 | அமாவாசை விரதம் |
| 20.01.2018 | சதுர்த்தி விரதம் |
| 29.01.2018 | பிரதோஷ விரதம் |
| 31.01.2018 | தைப்பூசம் மொரிசியன் மக்கள் காவடித் திருவிழா |

சிவனடியவர்கள் அனைவரும் வந்து திருவருள் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்க

சொர்ணலிங்கேஸ்வரர் கடாட்சத்தினால்
அனைத்து வழிபாட்டுப் பூஜைகளும்
சிறப்போடு இடம்பெறுகின்றது...

**159, Avenue Paul Vaillant Couturier**
**93120 La Courneuve, France**
**Tél. 01 48 36 26 73 / 01 48 37 86 35**
**www.sivankovil@orange.fr**



# Poopathy

அம்மாவின் கைப்பக்குவம்




**தாயகத்தில் பூநகரியிலிருந்து**
**இறக்குமதி செய்யப்பட்ட**
**மொட்டைக்கருப்பன் அரிசி**

**அம்மாவின் கைப்பக்குவத்தில்...**

**தற்பொழுது உங்கள் அபிமான**
**வர்த்தக நிலையங்கள் அனைத்திலும்...**

**Imported & Distributed by :**

5, Rue de la Prévoté
93120 La Courneuve
09 82 40 36 47

NORTHNEAST
*Le goût de votre origine*

# Kazuo Ishiguro

## 2017 இலக்கியத்திற்கான நோபல் பரிசினை வென்றார்.



இவர் ஜப்பானைப் பூர்வீகமாகக் கொண்ட இங்கிலாந்து எழுத்தாளராகும். 1954ம் ஆண்டு Nagasaki நகரில் பிறந்த இவர் தனது 5வது வயதில் குடும்பத்தினருடன் இங்கிலாந்திற்கு குடிபெயர்ந்தார். 1982ம் ஆண்டு இங்கிலாந்து குடியுரிமை பெற்றார். இன்று இவர் இங்கிலாந்தின் தவிர்க்க முடியாத இலக்கிய ஆளுமையாகும்.
நாவலாசிரியரான Kazuo Ishiguro புதினங்களின் பலம், மனித உணர்வுகளின் பிரதிபலிப்பு எனவும் அவரின் எழுத்துக்கள் நாம் வாழும் உலகத்துடனான தொடர்பை மனித கற்பனை உணர்வுகளின் ஆழத்திலிருந்து வெளிப்படுகின்றன எனவும் நோபல் அக்கடமி புகழ்ந்துள்ளது. இதுவரை 40 மொழிகளில் இவரது எழுத்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இரண்டு புதினங்கள் திரைப்படங்களாகவும் வெளியாகியுள்ளன. இதில் Never let me go மிகவும் பிரபலமான திரைப்படமாகும். Times நாளிதழின் இங்கிலாந்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் வரிசையில் இவருக்கு 32வது இடமாகும். பலமுறை Booker பரிசுகள் 1998 ல் பிரான்சின் இலக்கிய கௌரவிப்பான செவாலியர் விருது (Chevalier de l'ordre des Arts et des lettres) எனப்பல விருதுகளுக்கு அதிபதியாவார். 63 வயதாகும் கசுவோ இசுகுரோவிற்கு நோபல் அக்கடமி 945000 யூரோக்கள் அன்பளிப்பாக வழங்கி சிறப்பித்துள்ளது.




# Dora

## குழந்தைகளின் சாகசத்தோழி

இரண்டாயிரம் ஆண்டுக்கு பின்னர் உலகெங்குமுள்ள குழந்தைகளின் சாகசத்தோழி என்றால் அது Dora வாகத்தான் இருக்க முடியும். ஆங்கிலத்தில் வெளியாகி இன்று உலகெங்கும் 40 இற்கும் அதிகமான மொழிகளில் வெளியாகிவிட்டது. மொத்தம் 172 அத்தியாயங்கள் வெளியாகிவிட்டன. Dora l'Exploratrice க்கு உலகமெங்கும் விசிறிகள்.

டோரா என்னும் 7 வயதுச் சிறுமி சுற்றுலா செல்வதில் ஆர்வமானவள், சாகசக்காரி. நண்பனாக Babouche எனும் குரங்கு இடையூறுகள் விளைவிக்க Chipeur எனும் நரி இடையூறுகளைத் தவிர்த்து எவ்வாறாக ஒவ்வொரு முறையும் டோரா தனது இலக்குகளைச் சென்றடைகிறாள் என்பதே கதை. தனித்துவமாக பார்வையாளர்களான குழந்தைகளையும் தன்னுடன் இணைத்துப் பயணத்தில் வெற்றி பெறுவார்.

சின்னத்திரை வெற்றியைத்தொடர்ந்து முதல் முறையாக டோரா திரைப்படமாக வெளிவரவுள்ளது. கார்ட்டுன் படமாக அல்லாமல் நடிக நடிகைகளுடன் பல கோடி டொலர் செலவில் சிறியவர் பெரியவர் என அனைவரையும் கவரும் வண்ணம் வெளியாகவுள்ளது. Bad Boys, Armageddon, Transformers போன்ற பிரபல Hollywood திரைப்படங்களை இயக்கிய Michael Bay, Dora திரைப்படத்தை இயக்கவுள்ளார்.

டோராவாக நடிப்பதற்கான சிறுமிக்கான தேடுதல் வேட்டை 5 கண்டத்திலும் நடந்து வருவதாக இயக்குனர் தெரிவித்துள்ளார். இதுவரை வெளியாகியுள்ள 172 எபிசொட்களுக்கு திரைக்கதை அமைத்த Nick Stoller உடன் இணைந்து திரைக்கதை தயாராகி வருவதாகவும் இயக்குனர் தெரிவித்துள்ளார்.
டோரா ரசிகர்களுக்கு கோலாகலமாக 2019ன் கோடை விடுமுறை காலத்தில் திரைப்படம் வெளியாகவுள்ளது.

## தோலைத் தானமாக்கினார்!

**உலகில் முதன் முதலாக** பிரான்ஸ் நாட்டவர் தன் சகோதரருக்கு தோலைத் தானமாக வழங்கியுள்ளார். 95 வீத எரிகாயங்களுடன் மரணிக்கும் தறுவாயில் இருந்த இரட்டையரில் ஒருவர் தோல் மாற்று சத்திரசிகிச்சை மூலம் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளார். வேலைத்தளத்தில் இரசாயனக் கலவைகளைக் கையாள்கையில் ஏற்பட்ட தீ விபத்தில் 95வீத உடற்பாகம் எரிகாயங்களுக்கு உள்ளானது. இரட்டையரில் ஒருவரது தோல் மற்றையவருக்கு மாற்றப்பட்டதால் தோலை அவரது உடற்பாகம் ஏற்றுக்கொள்ளும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# பரிஸ் லாச்சப்பலில்...




**2018ம் ஆண்டிற்கான
கலண்டர்களுக்கு
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!**

# சங்கீதா அச்சகம்



## Imprimerie SANKEET

**39, Bd. de la Chapelle - 75010 PARIS.   Tél. / Fax : 01 44 72 08 94**

M° : La chapelle ou Gare du Nord   e-mail : sangeethafrance@gmail.com